
குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
ஜென்னும் திருவாசகமும்...
பாகம் 1
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் திருவாசகமும்

## பாகம் 1

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
2. மனம் உழலாத நிலை வேண்டும்!
3. தயிர் போல மனம் உடைந்தேன்
4. பாவிடை ஆடுகுழல் போல் கரந்து பரந்தது உள்ளம்
5. தளிர்ப்பொற் பாதம் தாராயே
6. தேவையானது எது?
7. ஞானம் தேடி அலையும் பக்தர்கள்.
8. உளமார்ந்த மன்னிப்பு
9. வினைக்கு விளைவு உண்டு?
10. இறப்பு ஏன் ஏற்படுகிறது?
11. கவலையை ஒழிக்கும் இறைவன்
12. கடவுள் எங்கே?
13. அன்பு இல்லாதவரைக் கண்டு பயப்படுவேன்
14. அம்முயற்சியைக் கைவிடாது இருங்கள்

15. இன்று என்பதே நிஜம்
16. ஒவ்வொரு நாளும் இன்பம்
17. கடவுளே போற்றி
18. சாதலை முன்னம் அஞ்சேன்
19. உருகிப் பெருகி உளம்குளிர
20. அன்பினால் அடியேன்
21. ஞானமிலா அழுக்குமனத் தடியேன்
22. வேண்டேன் புகழ்
23. அச்சமில்லை அச்சமில்லை
24. ஜென்னும் திருவாசகமும் பாகம்

## 1.எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
### (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு சமயம் ஜென் ஆசிரியர் டோகோ தன்னுடைய சீடருடன் மடத்திற்கு அருகில் உயிர் நீத்த ஒருவருடைய குடும்பத்திற்கு ஆறுதல் கூறச் சென்றார்.

சவப்பெட்டியை தட்டியவாறே சீடன் "உயிரா, பிணமா?" என்று ஆசிரியரைப் பார்த்துக் கேட்டான்.


ஆசிரியர். "உயிர் என்றும் சொல்லமாட்டேன். பிணம் என்றும் சொல்ல மாட்டேன்"

சீடன். "எதனால் சொல்ல மாட்டீர்கள்?"

ஆசிரியர். என்னால் சொல்ல முடியாது, என்னால் சொல்ல முடியாது"

மடத்திற்கு திரும்பி வந்து கொண்டு இருந்தபோது,

சீடன், “ஆசிரியரே, நீங்கள் பதில் சொல்லவில்லை என்றால், உங்களை நான் உதைக்கப் போகிறேன்.”



ஆசிரியர். “நீ விரும்பினால் என்னை அடித்தாலும் அடித்துக் கொள். ஆனால், என்னால் பதில் கூற முடியாது.”

சீடன் ஆசிரியருக்கு ஒரு அடி கொடுத்தான்.

கொஞ்ச வருடங்களுக்கு பின்பு டோகோ இறந்தார். சிசோ, டோகோவிற்கு அடுத்த படியாக, மடத்தில் ஜென் ஆசிரியராக பதவி ஏற்றார். சீடன் சிசோவிடம் சென்று நடந்த அனைத்தையும் கூறினான்.

சிசோ. “என்னாலும் உயிர் என்றும் சொல்ல முடியாது. பிணம் என்றும் சொல்ல முடியாது” என்றார்.

இதைக் கேட்ட சீடனுக்கு தன்னொளி பெற்று தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல பிறப்பு, இறப்பு என்பதன் அர்த்தம் புரிந்து கொண்டான்.

“உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு” என்பது வள்ளுவம்.

“வல்அரசராகி முனிவராய் தேவராய்ச்

செல்லாநி ன்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்”

(திருவாசகம். சிவபுராணம் 29-32)

என்பது மாணிக்கவாசகரின் திருவாசக வாசகம்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 2. மனம் உழலாத நிலை வேண்டும்!

### (ஜென்னும் திருவாசகமும்)

மனம் தெளிவடைய **அருமையான** ஜென் கதை


ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான் அவனுக்கு எல்லாம் இருந்தாலும் மனதில் நிம்மதி இல்லாமல் ஒரே குழப்பதிலே இருந்தான்.

ஒரு ஜென் குருவை சந்தித்து ஐயா எனக்கு ஜென் கற்க ஆசை சொல்லிக் கொடுங்கள் என்றான்.

இவனின் அவசரமான பேச்சை கவனித்த குரு, இதோ பாரப்பா உன் மனம் ஒரு நிலையாக இல்லை, நான் என்னதான் கற்றுக் கொடுத்தாலும் உனக்கு புரியாது நீ போயிட்டு அப்புறம் வா என்கிறார்.

இருந்தாலும் இவன் விடவில்லை.

ஐயா என்னால் போகமுடியாது தயவுசெய்து எனக்கு நீங்க ஜென் சொல்லித்தரனும் மற்றும் எனக்கு நிறைய குழப்பங்களும் சந்தேகமும் இருக்கு அதெல்லாம் நீங்கதான் தீர்த்து வைக்கணும் என்கிறான்.



அப்படியென்றால் சரி நான் உன்னை எனது சீடனாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை இங்கே நீ ஒரு ஆறுமாதம் மௌன விரதம் கடைபிடிக்கவேண்டும் சரியா?

ஆறு மாதம்மா? சற்று யோசித்து, சரிங்க ஐயா இருக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்தான்.

ஆனால் ஆறு மாதம் கழித்து எனது சந்தேங்களை நீங்க போக்கணும் சரியா?

சரி சரி அதெல்லாம் உன் மனதில் வச்சிக்கோ நான் ஆறு மாதம் கழித்து உனது அனைத்து குழப்பங்களையும் நீக்குகிறேன் என்றார் குரு.

அதன்பின் அந்த பணக்காரன் ஆசிரமத்தில் சேர்ந்து மௌன விரதத்தை கடைபிடிக்கிறார்.

அடுத்தடுத்து அவருடைய நேரங்கள் முழுவதும் தியானம், மந்திரம் ஜெபிப்பது, ஆன்மீக சொற்பொழிவை கேட்பது இப்படியே நாட்கள் ஓடியது.

மெல்ல மெல்ல அவருடைய மனம் தெளிந்தது, முன்பு குழம்பிருந்த விஷயங்கள் எல்லாமே தெளிவாக புரிய ஆரம்பித்தது.

ஆறு மாதம் கழித்து குரு அவரை அழைத்தார், நீ மௌன விரதம் இருந்தது போதும் இப்போது உனது சந்தேகங்களை கேள் என்றார்.

உடனே அந்த பணக்காரன் அமைதியான குரலில் கேட்பதற்கு ஒன்றும் இல்லை குருவே எல்லா குழப்பங்களும் எனக்கு நீங்கியது இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று.

சும்மா கேள்வி கேட்டால் மட்டுமே நமக்கு பிரச்சனைகள் நீங்காது> ஆன்மீகத்தில் வளர்ச்சி அடையமுடியாது.

சொல்லும் விசயங்களை கேட்டு சில மாதங்களோ அல்லது வருடங்களோ பயிற்சி செய்ய வேண்டும்.

**மனம் குழப்பம் என்றால் அப்படியேதான் இருக்கும் , சிலநேரங்கள் மௌனமாக மனதை கவனியுங்கள்**
அப்போதுதான் மனம் தெளிவடையும். மனம் தெளிந்தால் தானாக எல்லாமே புரியவரும்.

மனம் உழலாமல் இருக்க இப்பாடலில் மாணிக்கவாசகர் வேண்டுகிறார்.

"மின்கணினார் நுடங்கும் இடையார்
வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப்
புரளாமல் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித்
தித்தித்து என் பிழைக்கு இரங்கும்
அங்கணனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே." (திரு.பா.414)

"மனம் உழலாத வகையில் என் உள்ளத்துள் புகுந்து, அமுதம் ஊறி தித்திக்குமாறு செய்து, என் பிழைகளைக் கண்டு மனம் இரங்குவாயாக!" என வேண்டுகிறார் மாணிக்கவசாகர் திருவாகத்தில்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 3.தயிர் போல மனம் உடைந்தேன்
### (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஞாயிற்றுக் கிழமை, நியூயார்க் சர்வதேச ஜென் மையத்தில் சியுங் சான் தங்கியிருந்தபோது, ஒரு பெரிய விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த விழாவுக்கு அமெரிக்காவில் வசிக்கும் கொரியப் பெண்கள் பலரும் வந்திருந்தனர். அவர்கள் பைகள் நிறைய உணவையும் பரிசுகளையும் கொண்டுவந்திருந்தனர்.

பெண் ஒருவர், பெரிய பிளாஸ்டிக் மலர்க்கொத்து ஒன்றைப் பரிசாகக் கொண்டுவந்திருந்தார். அதை சியுங் சானின் அமெரிக்க மாணவர் ஒருவரிடம் புன்னகைத்தபடி கொடுத்தார். அந்த மாணவர்,

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அந்த பிளாஸ்டிக் மலர்களை, மேலங்கிகளைக் கொண்டு மறைத்தார்.

ஆனால், அங்கு வந்த மற்றொரு பெண் உடனடியாக அந்த மலர்க்கொத்தைக் கண்டுபிடித்து விட்டார். பெரு மகிழ்ச்சியுடன் அவற்றை எடுத்துக்கொண்டுபோய் தர்ம அறையின் பீடத்திலிருந்த பூ ஜாடியில் வைத்தார்.

அந்த மாணவருக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது. அவர் சியுங் சானிடம், “அந்த பிளாஸ்டிக் மலர்கள் ரசனைக் குறைவாக இருக்கின்றன. அவற்றைப் பீடத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய் வேறெங்காவது வைத்துவிட முடியாதா?” என்று கேட்டார்.

“உன்னுடைய மனம்தான் பிளாஸ்டிக்காக இருக்கிறது. இந்த மொத்தப் பிரபஞ்சமும் பிளாஸ்டிக் தான்” என்றார் சியுங் சான்.

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” என்றார் மாணவர்.

“புத்தர் சொல்கிறார், ‘ஒருவரின் மனம் தூய்மையாக இருந்தால், மொத்தப் பிரபஞ்சமும் தூய்மை யாக இருக்கும்;
ஒருவரின் மனம் களங்கத்துடன் இருந்தால், மொத்தப் பிரபஞ்சமும் களங்கத்துடன் இருக்கும்.’

ஒவ்வொரு நாளும், நாம் மகிழ்ச்சியற்ற பலரைச் சந்திக்கிறோம். அவர்களின் மனம் சோகமாக இருக்கும்போது, அவர்கள் பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, தொடுவது என அனைத்துமே சோகமாக இருக்கும்.

மொத்தப் பிரபஞ்சமும் சோகமாகவே இருக்கும். மனம் மகிழ்ச்சியாக இருக்கும்போது, மொத்தப் பிரபஞ்சமும் மகிழ்ச்சியாக இருக்கும்.

நீ ஏதாவது ஒன்றுக்கு ஆசைப்பட்டால், அதனுடன் நீ பிணைக்கப்பட்டு விடுகிறாய்.

அதை நீ புறக்கணித்தாலும், அதனுடன்தான் நீ பிணைக்கப்பட்டி ருக்கிறாய். ஒரு பொருள் அல்லது விஷயத்துடன் பிணைக்கப்பட்டிருப்பது என்பது உன் மனத்துக்கான தடையாகிவிடும்.

அதனால், ‘எனக்கு பிளாஸ்டிக் பிடிக்காது’ என்பதும் ‘எனக்கு பிளாஸ்டிக் பிடிக்கும்’ என்ற இரண்டுமே பிணைப்புகள்தாம். உனக்கு பிளாஸ்டிக் மலர்கள் பிடிக்காது, அதனால் உன் மனம் பிளாஸ்டிக்காகிவிடுகிறது. அதனால், மொத்தப் பிரபஞ்சமும் பிளாஸ்டிக்காக விடுகிறது. அவை எல்லாவற்றையும் கைவிடு.

அதற்குப் பிறகு, எதனாலும் தடையிருக்காது. மலர்கள் பிளாஸ்டிக்காக இருக்கின்றனவா அல்லது உண்மையாக இருக்கின்றனவா என்பதைப் பற்றி அக்கறைப்பட மாட்டாய்.

அவை பீடத்தில் இருக்கின்றனவா அல்லது குப்பைக் குவியலில் இருக்கின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்பட மாட்டாய். இது உண்மையான விடுதலை.

ஒரு பிளாஸ்டிக் மலர் என்பது வெறுமனே பிளாஸ்டிக் மலர் அவ்வளவே. ஓர் உண்மையான மலர் என்பதும் வெறுமனே உண்மையான மலர் அவ்வளவே.

நீ பெயர், வடிவத்துடன் பிணைக்கப்படத் தேவையில்லை” என்று சொன்னார் சியுங் சான்.

“ஆனால், நாம் இங்கு அனைவருக்குமான ஒரு அழகான ஜென் மையத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறோம். எப்படி என்னால் அக்கறை காட்டாமல் இருக்க முடியும்? அந்த மலர்கள் மொத்த அறையின் அழகையும் பாழ்படுத்துகின்றன” என்றார் மாணவர்.



”யாராவது ஒருவர் புத்தருக்கு உண்மையான மலர்களை வழங்கினால், புத்தர் மகிழ்ச்சி அடைகிறார். யாராவது ஒருவருக்கு பிளாஸ்டிக் மலர்கள் பிடித்துபோய், அவற்றை அவர் புத்தருக்கு வழங்கினாலும், புத்தர் மகிழ்ச்சியாகவே இருக்கிறார்.

புத்தர் பெயருடனோ, வடிவத்துடனோ பிணைக்கப்படவில்லை. மலர்கள் பிளாஸ்டிக்கா அல்லது உண்மையா என்பது பற்றி புத்தருக்கு அக்கறை கிடையாது. அவர் நமது மனம் பற்றி மட்டும்தான் அக்கறைப்படுகிறார்.

பிளாஸ்டிக் மலர்களை வழங்கும் இந்தப் பெண்களிடம் தூய்மையான மனம் இருக்கிறது. அவர்களின் இந்தச் செயல் போதிச்சத்துவச் செயலாகும்.

உன் மனம் பிளாஸ்டிக் மலர்களைப் புறக்கணிக்கிறது. அதனால், நீ நல்லது, கெட்டது, அழகு, அசிங்கம் என்று பிரபஞ்சத்தைப் பிரித்து விட்டாய்.

அதனால், உன் செயல் போதிச்சத்துவச் செயலில்லை. புத்தரின் மனத்தை மட்டும் வைத்துக் கொள்.

அப்போது உனக்கு எந்தத் தடையும் இருக்காது. உண்மையான மலர்கள் நல்லது; பிளாஸ்டிக் மலர்களும் நல்லது.

இந்த மனம் பெருங்கடலைப் போன்றது. அதனுள் ஹட்சன் ஆறு, சார்லஸ் ஆறு, மஞ்சள் ஆறு, சீன நீர், அமெரிக்க நீர், தூய்மையான நீர், மாசடைந்த நீர், உப்பு நீர், தெளிந்த நீர் என அனைத்து நீரும் ஓடுகிறது.

'உன் நீர் மாசடைந்திருக்கிறது. நீ எனக்குள் ஓடமுடியாது' என்று கடல் ஒருபோதும் சொல்வதில்லை. அது எல்லா நீரையும் ஏற்றுக்கொள்கிறது. எல்லாவற்றையும் இணைத்து, கடலாகிறது.

அதனால்,நீ புத்தரின் மனத்தை வைத்துக்கொண்டால்,
உன் மனம் பெருங்கடலைப் போலாகிவிடும்.

இதுதான் ஞானத்துக்கான பெருங்கடல்" என்றார் சியுங் சான். அந்த மாணவர் ஆழ்ந்த வணக்கத்தைச் செலுத்தினார்.

இங்கு மாணிக்கவாசகர் மனமும் பெருங்கடல் போல் இருக்கிறது. அதனால்தான் மனம் உடைந்து புலம்புகிறார்.

"மாழைமைப் பாவிய கண்ணியர்
வன்மத் திடஉடைந்து
தாழியைப் பாவும் தயிர்போல்
தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழிஎப் போதுவந்து எந்நாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழி அப்பா உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே" (திரு.பா.413)

கருணைக் கடலாக விளங்கும் தந்தையே! என்னை அடிமையாக உடையவனே அழகிய, மைபூசிய, கண்ணினை உடைய பெண் இன்பமாகிய வலிய மத்தால் கடையப்பட்டு. சிதறி, பானை முழுவதும் பரவும் தயிர் போல மனம் உடைந்தேன்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

## 4.பாவிடை ஆடுகுழல் போல் கரந்து பரந்தது உள்ளம் (ஜென்னும் திருவாசகமும்)

கல்லுடைக்கும் தொழிலாளி ஒருவன் தன் தொழிலை நன்கு மகிழ்ச்சியாக செய்து கொண்டு வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் அவன் மனதில் ஒருவித எண்ணம் எழுந்தது. அதாவது, நாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்து வாழ வேண்டும். அதற்காக அவன் பலவாறு யோசித்தான்.




அப்போது அந்த ஊர் மக்கள் அந்த ஊருக்கு வந்திருக்கும் துறவியைப் பற்றி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு, அவரைக் காணச் சென்றான்.

அந்த ஜென் துறவி மிகவும் சக்தி வாய்ந்தவர். அவருக்கு கடவுளின் அருள் முழுவதும் கிடைத்ததால், அவர் எது சொன்னாலும் நடக்கும்.

அத்தகையவரிடம் அவன் சந்தித்து, வரம் ஒன்றை வாங்கிக் கொண்டு சென்றான்.

அவன் எப்போதும் பலமிக்கவனாக, அவன் நினைப்பது எல்லாம் நடக்கக்கூடியதான ஒரு வரம் வேண்டி கேட்டுக் கொண்டான்.

துறவியும் அவனுக்கு அவன் ஆசைப்படியே வரத்தையும் கொடுத்தார்.

அப்போது அவன் ஒரு நாள் ஒரு பெரிய வியாபாரியின் வீட்டிற்கு சென்றான்.

அப்போது அந்த வியாபாரியின் செல்வாக்கை கண்டு, நானும் ஒரு பெரிய வியாபாரி ஆக வேண்டும் என்று நினைத்தான்.
உடனே அவனும் ஒரு பெரிய வியாபாரியாக மாறிவிட்டான்.

மற்றொரு நாள் ஒரு அரசாங்க அதிகாரியைக் கண்டான். அப்போது அந்த அதிகாரியைப் பார்த்ததும், பணக்கார வியாபாரிகள் முதல் அனைவரும் பயப்படுவதைக் கண்டான்.

ஆகவே அதிகாரியாக வேண்டும் என்று நினைத்தான். அதிகாரியும் ஆனான்.

பின் அவன் அதிகாரியாக வெளியே வெயிலில் செல்லும் போது சூரியனின் வெப்பத்தை அவனால் தாங்க முடியவில்லை.

ஆகவே சூரியன் மிகவும் சக்தி வாய்ந்தது என்று எண்ணி சூரியனாக மாறினான்.

சூரியனாக மாறியப்பின் மேகம் சூரியனை மறைத்ததால், மேகமாக மாற ஆசைப்பட்டான்.

மேகமாக மாறியதும் காற்று வீசும் போது மேகம் கலைந்தது, எனவே மேகத்தை விட காற்று பலமிக்கது என்று காற்றாக மாறினான்.

காற்றாக இருக்கும் போது, மலையை காற்றால் அசைக்க முடியவில்லை, ஆகவே மலையே சிறந்தது என்று மலையாக மாறினான்.

மலையாக மாறிய பின் மலையின் சிறு பகுதி உடைந்து விழுந்தது. எப்படியென்று பார்த்தால், அங்கு ஒரு கல்லுடைக்கும் தொழிலாளி தன் உளியால் மலையின் சிறு பகுதியை உடைத்தான்.

ஆகவே மலையை விட கல்லுடைக்கும் தொழிலாளியே சிறந்தது என்று நினைத்து, இறுதியில் பழைய தொழிலான கல்லுடைக்கும் தொழிலாளியாகவே மாறிவிட்டான்.

நமது மனம் அலைபாயக் கூடியது. மனதை ஒருமைப்படுத்தினால் சந்தோஷம் கிடைக்கும்.

மாவடு வகிரன்ன கண்ணி
  பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே
  யிடுவாய் நின் குறிப்பறியேன்
பாவிடை ஆடுகுழல்
  போல் கரந்து பரந்ததுஉள்ளம்
ஆகெடுவேன் உடையாய்
  அடியேன் உன் அடைக்கலமே.” (திரு.பா.415)

“பாலின் இடையில் ஓடும் நாடா போல மறைந்தும் விரிந்தும் திரியும் உள்ளம் உடையவனாய், அந்தோ! கெட்டு அழுகிறேன்” என்று மாணிக்கவாசகர் தனது அலைபாயும் மனதை நினைத்து வருந்துகிறார்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
ஜென்னும் திருவாசகமும்...
பாகம் 2
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# 5.தளிர்ப்பொற் பாதம் தாராயே
## (ஜென்னும் திருவாசகமும்)

ரஷ்யாவில் மூன்று குருமார்கள் திடீரென மக்களிடையே பிரபலம் ஆயினர்.

ரஷ்யாவின் புகழ்பெற்ற மதகுருவுக்கு அந்த மூன்று துறவிகள் மீதும் பொறாமையும் கோபமும் ஏற்பட்டது.

அவர் அந்த மூன்று துறவிகளையும் பார்ப்பதற்காக அவர்கள் வசிக்கும் கிராமத்திற்குப் படகில் சென்றார்.

அந்தத் துறவிகள் வசித்த கிராமம் ஒரு ஏரியின் கரையில் இருந்தது. ஏரியைக் கடந்து கரையில் இறங்கினார் மதகுரு.

திடீர் பிரபலமடைந்த மூன்று துறவிகளும் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தனர்.

குடியானவர்களைப் போல எளிமையாக அவர்கள் இருந்தனர். மதகுருவைப் பார்த்தவுடன் எழுந்து பயபக்தியுடன் அவரது காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள். இதைக் கண்டு மதகுருவுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

“இவர்கள் நான் நினைத்து வந்தது போல அபாயகரமானவர்கள் அல்ல. இவர்களைத் திருத்திவிடலாம்.” என்று எண்ணி அவர்கள் எப்படி துறவிகளாக மாறினார்கள் என்று கேட்டார்.

"எங்களுக்குத் தெரியாது. எங்களைத் துறவிகள் என்று சொல்லமுடியுமா என்றும் தெரியவில்லை.



மக்கள் எங்களை அப்படி அழைக்கிறார்கள். நாங்கள் துறவிகள் அல்ல, எங்களை அப்படி அழைக்க வேண்டாம் என்றுதான் அவர்களிடம் சொல்கிறோம்.

நாங்கள் அவர்களிடம் சொல்லச் சொல்ல அவர்கள் எங்களைக் கூடுதலாக வழிபடுகிறார்கள். அதனால் நாங்கள் அவர்களிடம் பேசுவதைக்கூட விட்டுவிட்டோம்" என்றனர்.

மதகுரு மேலும் சந்தோஷமடைந்தார்.
"உங்களது பிரார்த்தனை என்ன? எப்படி பிரார்த்தனை செய்வது என்று தெரியுமா?" என்று கேட்டார்.

மூன்று பேரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

"உண்மையிலேயே சொல்லவேண்டுமெனில், எங்களுக்கு எந்தப் பிரார்த்தனையும் செய்யத் தெரியாது. சொல்வதற்கே சங்கடமாக இருக்கிறது. ஆனாலும் நீங்கள் கேட்பதால் சொல்கிறோம். நாங்களே ஒரு பிரார்த்தனை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறோம்.

தந்தை, மகன் மற்றும் தூய ஆவியாக ஒரே கடவுள் இருக்கிறார் என்று எங்களுக்கு சொல்லப்பட்டது. நாங்கள் மூன்று பேராக உள்ளோம். கடவுளும் மூன்றாக உள்ளார்.

அதை வைத்து நாங்கள் ஒரு பிரார்த்தனை மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினோம். ' நீங்களும் மூவர். நாங்களும் மூவர். எங்கள் மீது கருணை காண்பியும். இதுவே எங்கள் பிரார்த்தனை" என்றனர்.

அந்த மதகுரு அந்த மூன்று பேரையும் பார்த்து எரிச்சல் அடைந்தார். "இது என்ன முட்டாள்தனம். இது ஒரு பிரார்த்தனையா? நான் உங்களுக்கு சரியான பிரார்த்தனை முறையைச் சொல்லித் தருகிறேன்" என்றார்.

அவர்களும் அவரிடம் திரும்பத் திரும்ப மூன்று முறை கேட்டு பிரார்த்தனையைக் கற்றுக்கொண்டனர்.

மதகுரு மிகவும் திருப்தியாக தனது படகில் ஏறினார். ஏரியின் நடுவில் அவர் ஒரு காட்சியைக் கண்டார். படகோட்டியின் கண்களிலும் வியப்பு. அவரிடம் பிரார்த்தனையைக் கற்றுக்கொண்ட மூன்றுபேரும் தண்ணீரின் மேல் படகை நோக்கி ஓடிவந்தனர்.

மதகுருவின் படகு நின்றது. அவர்கள் மதகுருவிடம், "தயவுசெய்து எங்களுக்கு உங்கள் ஜெபத்தை இன்னும் ஒரே ஒரு முறை கற்றுக்கொடுங்கள். எங்களுக்கு மறந்து போய்விட்டது" என்று கேட்டனர்.

மதகுரு வியப்பில் ஆழ்ந்தார். அவர் அந்த மூன்று மனிதர்களின் பாதம் தொட்டு வணங்கினார். "நான் என்ன சொல்லிக்கொடுத்தேனோ தயவுசெய்து அதை மறந்துவிடுங்கள். உங்கள் பிரார்த்தனை ஏற்கெனவே கேட்கப்பட்டுவிட்டது.

எனது பிரார்த்தனைதான் இதுவரை கேட்கப்படவேயில்லை. நீங்கள் உங்கள் முறையிலேயே கடவுளைத் தொழுங்கள். என்னை மன்னியுங்கள்" என்றார்.

"துணியா உருகா அருள்பெருகத்
    தோன்றும் தொண்டரிடைப்புகுந்து
திணியார் மூங்கில் சிந்தையேன்
    சிவனே நின்று தேய்கின்றேன்
அணியார் அடியார் உனக்குள்ள
    அன்பும் தாராய் அருள் அளியத்
தணியாது ஒல்லை வந்தருளித்
    தளிர்ப்பொற் பாதம் தாராயே." (திருவாச.பா.492)

உனது அடியார்கள், உன்பால் வைத்துள்ள அன்பை, நீ எனக்குத் தருதல் வேண்டும். இனியும் தாமதம் செய்யாது, விரைந்து வந்து, நின்னுடைய அருளானது கனிய, தளிர் போன்ற நினது பொன்னடிகளைத் தந்து அருளுவாயாக!" என வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


# 6.தேவையானது எது?

## (ஜென்னும் திருவாசகமும்)

புகழ்பெற்ற ஜென் குருவான அவரிடம் பல இளைஞர்களும், இளம்பெண்களும் பாடம் கற்று வந்தனர்.

தினசரி அவரைப் பார்த்துப் பார்த்து அவரின்மேல் ஒரு பெண்ணிற்கு காதல் வந்துவிட்டது.

அது மிகவும் தவறு என்பது அவளுக்குப் புரிந்த போதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் தவித்தாள்.



குரு தனிமையில் இருந்தபோது அவரிடம் சென்ற அவள் தன் காதலை வெளிப்படுத்தினாள்.

“இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்” என்று வேண்டிக் கொண்டாள்.

“கவலைப்பட வேண்டாம். நீ நினைப்பதில் தவறு ஏதும் இல்லை. நம் இருவருக்கும் தேவையான காதல் உன்னிடமே சுரந்து கொண்டிருக்கிறது” என்றார்.

“அப்படியானால் நீங்களும் என்னைக் காதலித்து திருமணம் செய்து கொள்வீர்களா?” ஆசையாகக் கேட்டாள்.

“அது முடியாது. நம் இருவருக்கும் தேவையான கட்டுப்பாடு என்னிடம் சுரந்து கொண்டிருக்கிறது” என்றார் குரு.

திருவாசகம் பேசுகிறது.....

“மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டிக்க வல்லானே (திருவாச.பா.1 வரிகள்87-88)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7. ஞானம் தேடி அலையும் பக்தர்கள்.

### (ஜென்னும் திருவாசகமும்)

அரசன் ஒருவனுக்கு ஞானம் பெற வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அவன் உடனடியாக குருமார்களைத் தேடி அலையத் தொடங்கினான்.

அதில் அவனுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. ஒரு நாள் தனது குதிரையில் மனம் போன போக்கில் சுற்றத் தொடங்கினான். ஒரு மலைக் குகையில் மெய்ஞான குரு ஒருவரைச் சந்தித்தான்.

குருவை வணங்கிய மன்னன், அவர் முன்பாக அமர்ந்தான். ஆனால் குருவோ கண் மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவர் கண் விழிப்பார் என்று காத்திருந்த மன்னனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பல மணி நேரம் கடந்தும், ஞானி கண் திறக்கவில்லை.

இறுதியாக தானே பேசி விடுவது என்று முடிவு செய்து, ‘சுவாமி! நான் ஞானத்தை அடைய வேண்டும். புத்தர் போல் ஆக வேண்டும்’

என்று தனது கோரிக்கையை முன் வைத்தான்.

குரு கண் விழித்தார்.

அரசன் ஏறி வந்த குதிரையை உற்றுப் பார்த்தார். பிறகு, 'குதிரையைத் தேடாமல், எதற்காக ஞானத்தைத் தேடி வந்தாய்?' என்று கேட்டார்.

மன்னனுக்கு குழப்பம், 'சுவாமி! என்னிடம் குதிரை இருக்கிறது? அதோ பாருங்கள்' என்று குதிரையைச் சுட்டிக்காட்டினான்.

குரு லேசாக புன்னகைத்தபடி, 'நீ ஏன் குதிரையைத் தேடிப் பிடிக்கக் கூடாது?' என்றார்.

மன்னனுக்கு கடுமையான கோபம் வந்தது. 'என்ன சுவாமி! விளையாடுகிறீர்களா? என்னிடம் தான் குதிரை இருக்கிறதே! அதில்தானே ஏறி வந்தேன். பிறகு எதற்காக நான் மறுபடியும் குதிரையை தேட வேண்டும்' என்றான்.

சிறிது நேரம் சிரித்தபடியே இருந்தவர், பிறகு எழுந்து குகைக்குள் சென்று விட்டார்.

ஞானியின் உபதேசம் முடிந்து விட்டது.

அதாவது தன்னிடம் இருக்கும் குதிரையை எப்படி, மன்னனால் தேட முடியாதோ, அதே போல்தான் ஒவ்வொரு மனிதனுமே புத்தனாக, ஞானம் உடையவனாக இருக்கும்போது, வெளியில் போய் ஞானத்தையும் தேட முடியாது. அவனுக்குள்தான் தேடிக்கொள்ள வேண்டும்.

"பொய்யா யினவெல்லாம்
போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி
மிளிர்கின்ற மெய்ச்சுடரே." (திருவாசகம் பா.1 வரிகள் 37-40)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8.உளமார்ந்த மன்னிப்பு

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

பான்கெய் என்ற ஜென் மாஸ்டர். தன்னுடைய சிஷ்யர்களுக்குப் போதனை செய்துகொண்டிருந்தார்.

அப்போது அங்கே ஒரு பூசாரி வந்தார். உள்ளூர்க் கோவிலில் வழிபாடு நடத்துகிறவர் அவர். புத்தர் மீதோ ஜென் மீதோ அவருக்கு நம்பிக்கை இல்லை.

ஆகவே, அவர் புத்தரை இழிவுபடுத்திப் பேசினார். ‘ஜென் என்பது சுத்தப் பைத்தியக் காரத்தனம்’ என்றார்.

பான்கெய் அவரைக் கண்டிக்கவோ மறுக்கவோ இல்லை. ‘ஐயா, உங்களுக்கு என்ன பிரச்னை?’ என்றார் அமைதியாக.

‘எங்களுடைய சாமி என்னென்ன அதிசயங்கள் செய்திருக்கிறது, தெரியுமா?’

‘தெரியவில்லை, சொல்லுங்கள்!’

‘அவர் நீர்மேல் நடப்பார், தீயை அள்ளி விழுங்குவார், அவர் ஒரு சொடக்குப் போட்டால் தங்கம் கொட்டும், நடனம் ஆடினால் பூமியே நடுங்கும்!’ என்றார் பூசாரி.

‘இதுபோல் எந்த அதிசயமும் செய்யாத உங்கள் புத்தரையோ மற்ற ஜென் துறவிகளையோ கடவுள் என்று எப்படி என்னால் ஏற்றுக்கொள்ளமுடியும்?’

‘நீங்கள் நினைப்பது சரிதான் ஐயா’ என்றார் பான்கெய். ‘ஆனால், எங்களால் வேறொரு பெரிய அதிசயத்தைச் செய்ய முடியும்.’
‘அதென்ன?’

அமைதியாகச் சொன்னார் பான்கெய். ‘யாராவது தப்புச் செய்தால், எங்களுக்குத் துரோகம் இழைத்தால், அவமானப்படுத்தினால், அவர்கள்மீது எந்த வன்மமும் மனத்தில் வைத்துக்கொள்ளாமல் முழுமையாக மன்னித்துவிடுவோம்!’

“மானேர் நோக்கி உடையான்பங்கா
    மறைஈறு அறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்குஅரியாய்
    சிறியேன் பிழைபொறுக்கும்
கோனெ சிறிதே கொடுமைபறைந்தேன்
 - - - - - - - - - - - - - - - - - - - - - - -- - -” (திருவாச.பா.89)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9.வினைக்கு விளைவு உண்டு?

(ஜென்னும் திருவாசகமும்)

வயதான விவசாயிக்கு சிறிது நிலம் இருந்தது. வயதான காரணத்தினால் அவரால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை.

வீட்டில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அந்த விவசாயிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் நிலத்தில் வேலை செய்து விட்டு வந்து தனது தந்தையை பார்த்தான்.

தந்தை ஒரே இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். இதனைப் பார்த்த மகன் இனி தந்தை நமக்கு பயன்பட மாட்டார் என்று எண்ணி சவப்பெட்டி ஒன்றை செய்து வீட்டிற்கு எடுத்து வந்தான்.

அதைக் காட்டி தனது தந்தையிடம் சவப்பெட்டிக்குள் சென்று படுத்துக் கொள் என்று கூறினான்.

அதிர்ச்சியடைந்த தந்தையோ ஒன்றும் கூறாமல் உள்ளே ஏறி படுத்துக் கொண்டார்.

என்னை கொண்டுபோய் எறிந்து விடப்போகிறாய் என்று தெரியும்.

அதற்கு முன்னதாக உனக்கு ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்று வயதான தந்தை தனது மகனைப் பார்த்து கேட்டார்.

உடனே மகன் வெறுப்புடன், "என்ன கூற வேண்டும்?" என்று கேட்டான்.

"என்னோடு சேர்த்து இந்த சவப்பெட்டியையும் எறிந்து விடாதே. இதை பத்திரமாக வைத்துக் கொள். ஏனெனில் உனது மகனுக்கு இது உதவியாக இருக்கும்" என்று கூறினார் அந்த வயதான தகப்பனார்.

குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்
    காவாய் உடையாய் கொடுவினையேன்"
உழைத்தால் உறுதி உண்டோ தான்
    உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
    பிறைசேர் சடையாய் முறையோஎன்று
அழைத்தால் அருளா தொழிவதே
    அம்மானே உன்னடி யேற்கே. (திருவாச.பா.496)

பழைய கொடிய வினையாகிய நோய் என்னை வாட்டும்போது காப்பாற்றுவாயாக! என வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.




## 10. இறப்பு ஏன் ஏற்படுகிறது?

(ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஊரில் ஒரு ஜென் துறவி இருந்தார். அவரிடம் சீடனாக ஒரு குறும்புக்கார பையன் இக்யூ சேர்ந்தான்.

அவன் மிகவும் புத்திசாலி. ஒரு நாள் அந்த சிறுவன் இக்யூ, துறவிக்குப் பிடித்த ஒரு கோப்பையை எடுத்து பார்த்தான்.

அப்போது எதிர்பாராத விதமாக கோப்பையானது உடைந்துவிட்டது. சொல்லப் போனால், அந்த கோப்பையானது மிகவும் விலைமதிப்பற்றது. அந்த கோப்பை துறவிக்கு மிகவும் விருப்பமானது.

அப்போது துறவி வரும் சத்தம் கேட்டது. உடனே அந்த சிறுவன் இக்யூ, கையில் இருந்த உடைந்த கோப்பையை பின்னால் மறைத்து வைத்தான்.

பின் அவன் துறவியிடம், “ஏன் மக்கள் அனைவருக்கும் இறப்பு ஏற்படுகிறது?” என்று கேட்டான்.

அதற்கு துறவி, “அது இயற்கையான ஒன்று. உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் இறப்பு என்பது உண்டு.” என்று சொன்னார்.

அப்போது உடனே அந்த சிறுவன் அந்த உடைந்த கோப்பையை நீட்டி “உங்கள் கோப்பைக்கும் இறப்பு வந்துவிட்டது” என்று கூறினான்.

**கரணங்கள் எல்லாங்**
**கடந்துநின்ற கறைமிடற்றன்**
**சரணங்க ளேசென்று**
**சார்தலுமே தான்எனக்கு**
**மரணம் பிறப்பென்**
**றிவையிரண்டின் மயக்கறுத்த**
**கருணைக் கடலுக்கே**
**சென்றூதாய் கோத்தும்பீ”** **(திருவாசகம். பா.223)**

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11. கவலையை ஒழிக்கும் இறைவன்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் பல ஆண்டுகளாக வயல்களில் ஒரு வயது முதிர்ந்த விவசாயி வேலை செய்து கொண்டிருந்தார்.

அவர் தனது வீட்டில் ஒரு குதிரையை வளர்த்து வந்தார். ஒரு நாள் அந்த குதிரை எங்கேயோ ஓடி போய்விட்டது.

அந்த விஷயத்தை அறிந்த அக்கம் பக்கத்தினர் அவரிடம் சென்று, “என்ன ஒரு கெட்ட அதிர்ஷ்டம்!” என்று கனிவோடு பேசினர்.
அதற்கு அந்த விவசாயி “இருக்கலாம்” என்று சொன்னார்.

மறுநாள் காலையில் ஓடிப் போன அந்த குதிரை திரும்ப வந்துவிட்டது.

ஆனால் வரும் போது மூன்று குதிரைகளோடு வந்தது. அதை அறிந்தவர்கள், அவரிடம் “எவ்வளவு அற்புதம்” என்று ஆச்சரியத்தோடு வந்து பேசினர். அதற்கும் அவர் “இருக்கலாம்” என்று கூறினார்.

அடுத்த நாள் அந்த விவசாயி மகன் அந்த குதிரையின் மீது சவாரி செய்ய ஆசைப்பட்டு, குதிரையின் மீது ஏறினான்.

ஆனால் அந்த குதிரையோ அவனை கீழே தள்ளிவிட்டது. அதனால் அவனது கால் உடைந்துவிட்டது.

உடனே பக்கத்து வீட்டுக்காரர்கள், அவரிடம் மறுபடியும் கனிவோடு பேசினர். அதற்கும் அவர் “இருக்கலாம்” என்று சொன்னார்.

மறுநாள் இராணுவ அதிகாரிகள் அந்த கிராமத்திற்கு இளைஞர்களை அழைத்து செல்ல வந்தனர்.

அப்போது கால் உடைந்த அந்த இளைஞனை பார்த்து, சென்று விட்டனர்.

உடனே அக்கம்பக்கத்தினர் அந்த அவரிடம் வந்து “என்ன பாக்கியம் செய்தீர்களோ உங்கள் மகனை விட்டு சென்று விட்டனர்” என்று கூறி வாழ்த்துக்களை தெரிவித்தனர். அதற்கும் அந்த விவசாயி “இருக்கலாம்” என்றே கூறினார்.

ஆகவே “எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கும். எனவே எதற்கும் கவலை கொள்ளாமல் எல்லாம் நன்மைக்கே என்று ஏற்று கொள்ள வேண்டும்” என்பது நன்கு இக்கதையின் மூலம் புரிகிறது.


“உழிதரு காலும் கனலும் புனலொடு
  மண்ணும்விண்ணும்
இழிதரு காலம்எக் காலம் வருவது
  வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடி யேன்செய்த
  வல்வினையைக்
கழிதரு காலமு மாய்அவை காத்தெம்மைக்
  காப்பவனே “    (திருவா.திருச்சகம் பாட.8)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 12. கடவுள் எங்கே?

(ஜென்னும் திருவாசகமும்)

ஒரு ஊரில் வாழும் மக்கள் அனைவரும் கடவுள் மற்றும் வெவ்வேறு மதங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.



அப்போது அது ஒரு பெரிய விவாதமாக மாறியது. அந்த விவாதம் "கடவுள் பார்க்க எப்படி இருப்பார்?" என்பதைப் பற்றியாகும்.

அங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறினர். பின்னர் அதற்கு சரியான பதிலை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், ஒரு புத்தரை பார்த்து அவரிடம் அதற்கான பதிலை கேட்கச் சென்றனர்.

அங்கு அவரிடம் "கடவுள் பார்க்க எப்படி இருப்பார்? அதற்கு சரியான பதிலை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று கூறினார்கள்.

அப்போது புத்தர் அவர்களது சீடர்களிடம் "நான்கு குருடர்கள் மற்றும் ஒரு பெரிய யானையை கொண்டு வாருங்கள்" என்று கூறினார்.

அந்த சீடர்களும் கொண்டு வந்தனர். பின் புத்தர் அந்த நான்கு குருடர்களிடம், "நான் ஒரு பொருளை தருகிறேன், அது என்னவென்று கூறுங்கள்" என்று கூறினார். அவர்களும் சரி என்று கூறினார்.

முதலில் அந்த குருடர்களுள் ஒருவன் யானையின் கால்களை தொட்டுப் பார்த்து, அது "தூண்" போல் இருக்கிறது என்று கூறினான்.

மற்றொருவன் அதன் வயிற்றைத் தொட்டுப் பார்த்து, அது "சுவர்" போல் இருக்கிறது என்று கூறினான்.

மூன்றாமவன் அந்த யானையின் காதுகளைத் தொட்டுப் பார்த்து, "துணி" போல் இருக்கிறது என்று சொன்னான். அடுத்தவன் அதன் வாலைத் தொட்டுப் பார்த்து, "கயிறு" போல் உள்ளது என்றான்.

பின்னர் புத்தர் மக்களிடம் “இந்த குருடர்கள் யானையை தொட்டுப் பார்த்து, அவர்கள் உணர்ந்ததை வெவ்வேறு மாதிரி கூறினார்கள்.

இவற்றில் எது சரி?” என்று கேட்டு, அதேப்போல் தான் கடவுளும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி என்று கூறி உள்ளே சென்று விட்டார்.

ஒரு பெயரும் ஒரு உருவமும் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதவன் இறைவன் என்கிறது திருவாசகம்.

“ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு” (திருவாக.பா.235)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 13. அன்பு இல்லாதவரைக் கண்டு பயப்படுவேன்
### (ஜென்னும் திருவாசகமும்)

ஒருநாள் ஜென் குருவும் அவரது சீடனும் குளக்கரையில் அமர்திருந்தார்கள்.

சீடன் பல கேள்விகளை குருவிடம் கேட்டுக் கொண்டிருந்தான்; குருவும் நிதானமாக பதிலளித்துக் கொண்டிருந்தார்.

“குருவே! சுயநலமிக்க அன்பிற்கும் சுயநலமில்லாத அன்பிற்கும் வித்தியாசம் என்ன? எனக்கு கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்” என்றான்.

ஜென் குரு சீடனுக்கு பதிலை எப்படி விளக்குவது என்று சற்றும் முற்றும் பார்த்தார்.

ஒரு இளைஞன் குளக்கரையில் தூண்டிலைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். அவனருகில் கூடையில் அவன் பிடித்துப் போட்ட

மீன்கள் துடித்துக் கொண்டிருந்தது.

குரு அந்த இளைஞனிடம் பேச்சு கொடுத்தார். “தம்பி! மீன் என்றால் ரொம்ப பிடிக்குமோ?” என்றார்.

அவனும் “ஆமாம் ஐயா! மீன் என்றால் எனக்கு உயிர். பிடித்து வைத்த மீன்களையெல்லாம் இன்றிரவு என் மனைவியை சமைக்கச் சொல்லி ஒரு பிடி பிடிக்கப் போகிறேன்;

உங்களுக்கு வேண்டுமானால் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்; குளத்தில் நிறைய மீன் கிடக்கிறது” என்றான்.

குருவோ, “எனக்கு வேண்டாம் தம்பி!” என்று புன்சிரிப்புடன் கூறி மறுத்துவிட்டார்.

நடப்பதையெல்லாம் சீடன் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இளைஞனும் சற்று நேரத்தில் மீன் பிடித்து விட்டு கிளம்பிவிட்டான்.

ஒரு வயது முதிர்ந்த பெரியவர் குளக்கரையை நோக்கி வருவதை ஜென் குரு பார்த்து விட்டார்.

அவர் கையில் ஒரு வெள்ளை நிறப் பை இருந்தது. குரு அதை உற்றுப் பார்த்தார்; அது பையின் நிறமல்ல, அதிலிருக்கும் பொரியின் நிறம் என்பதை தெரிந்து கொண்டார்.

அந்த பெரியவர் குளக்கரையில் வந்து அமர்ந்தார்.

பையிலிருந்த பொரியை எடுத்து தண்ணீரில் தூவினார்.



நூற்றுக்கணக்கான மீன்கள் பொரி இருக்கும் இடத்தை எறும்புகள் போல மொய்த்தன.

குரு அவரிடமும் பேச்சு கொடுத்தார். “என்ன பெரியவரே! மீன் என்றால் ரொம்ப பிடிக்குமோ?” என்று சற்று முன் அந்த இளைஞனிடம் கேட்ட அதே கேள்வியை பெ ரியவரிடம் கேட்டார்.

பெரியவரும், “ஆமாம் ஐயா! மீன் என்றால் எனக்கு உயிர்; நேரம் கிடைக்கும் போதெல்லாம் இங்கு வந்து இங்குள்ள மீன்களுக்கு உணவளிப்பேன்” என்றார்.

அவரிடம் பேசிமுடித்து விட்டு சீடனின் பக்கம் திரும்பினார்.

“பார்த்தாயா! இருவரும் மீனின் மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கிறார்கள் என்பது அவர்கள் ‘மீனென்றால் உயிர்’ என்று கூறும்போதே தெரிந்திருக்கும்.

அந்த இளைஞன், மீன்களை ‘ருசி’ என்னும் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டான். அவன் தன்னுடைய சந்தோஷத்தில் மட்டுமே கவனம் செலுத்தினான்.

ஆனால் அந்த பெரியவர் மீன்கள் பசியாறுவதற்கு சுயநலமில்லாமல் உணவளித்தார்.

இருவருக்கும் மீன்கள் பிடித்திருந்தது, ஆனால் இருவரின் நோக்கம் வேறு.

மொத்தத்தில், அன்பில் சுயநலம் இருந்தால் அது அன்பே இல்லை; சுயநலமில்லாத அன்பு தான் உண்மையானது, நிரந்தரமானது” என்று குரு சீடனுக்கு புரியவைத்தார்.

அன்பு இல்லாதவரைக் கண்டால் நான் பெரிதும் பயப்படுவேன் என்கிறது திருவாசகம்.

“வன்புலால் வேலும் அஞ்சேன்
    வளைக் கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பு எலாம் உருக நோக்கி
    அம்பலத்து ஆடு கின்ற
என் பொலா மணியை ஏத்தி
    இனிது அருள் பருக மாட்டா
அன்பு இலாதவரைக் கண்டால்
    அம்ம! நாம் அஞ்சு மாறே.” (திருவாசக. பா.518)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 14. முயற்சியைக் கைவிடாது இருங்கள்

## (ஜென்னும் திருவாசகமும்)

**அ**ந்த ஜென் துறவி மிகவும் ஜாலியானவர். ஒரு மடாலயம் அமைத்து, அதில் இருந்த சீடர்களுக்கு நற்பண்புகளை கற்றுக் கொடுத்து வந்தார்.

அவர் எதற்காகவும் சீடர்களிடம் கோபம் கொண்டது இல்லை.

ஒரு நாள் அந்தத் துறவி, தனது சீடர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது சீடர்கள் சிலர், ‘குருவே! உங்களுக்கு கதை என்றால் பிடிக்குமா? உங்களுக்குப் பிடித்த கதை எதுவும் இருக்கிறதா? என்று கேட்டனர்.

துறவியோ, ‘எனக்கு ‘குதிரையும் ஆடும் என்ற கதை பிடிக்கும் என்று சீடர்களிடம் சொன்னார்.

‘குருவே! உங்களுக்கு பிடித்த அந்தக் கதையை எங்களுக்கும் சொல்லுங்கள்’ என்று சீடர்கள் கேட்கவே, அவர்களுக்கு அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினார் குரு.

அந்த ஊரில் இருந்த சிறிய விவசாயி ஒருவர், ஒரு குதிரையையும், ஆட்டையும் வளர்த்து வந்தான்.

குதிரையும் ஆடும் சிறந்த நண்பர்களாக இருந்து வந்தன. ஒரு நாள் அந்த குதிரை நோயால் பாதிக்கப்பட்டது.

அதனால் குதிரைக்கு சிகிச்சை அளிக்க மருத்துவர் ஒருவரை அழைத்து வந்தான் விவசாயி.

மருத்துவர் அந்த குதிரையின் நிலையை பார்த்து, ‘நான் மூன்று நாட்கள் வந்து மருந்து தருகிறேன். அந்த மருந்தை சாப்பிட்டு குதிரை எழுந்து நடந்தால் சரி. இல்லையெனில் அதனைக் கொன்று விட வேண்டியது தான். வேறு வழியில்லை’ என்று சொல்லி, அன்றைய மருந்தை கொடுத்துச் சென்றார்.

இவர்களது உரையாடலை கேட்ட ஆடு பயந்து போனது. மறுநாள், அந்த மருத்துவர் வந்து அன்றைய மருந்தைக் கொடுத்துச் சென்றார்.

அதன் பிறகு ஆடு, தன் நண்பனான குதிரையிடம் வந்தது. ‘எழுந்து நட நண்பா! இல்லாவிட்டால் அவர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்’ என்று அந்த குதிரையை ஊக்குவித்தது.

மூன்றாம் நாளும் மருத்துவர் வந்து குதிரைக்கு மருந்து கொடுத்தார். பின்னர் அந்த விவசாயிடம் ‘நாளை குதிரை நடக்கவில்லை என்றால், அதனைக் கொன்று விட வேண்டும்.

இல்லாவிட்டால், குதிரைக்கு வந்திருக்கும் நோய் மற்றவர்களுக்கும் பரவி விடும்’ என்று சொல்லிச் சென்றார்.

அந்த மருத்துவர் போனதும், ஆடு குதிரையிடம் வந்து, ‘நண்பா!

எப்படியாவது எழுந்து நடக்க முயற்சி செய். உன்னால் முடியும். எழுந்திரு! எழுந்திரு!' என்று சொல்லியது. அந்த குதிரையும் முயற்சி செய்து எழுந்து நடந்து விட்டது.

எதிர்பாராதவிதமாக அந்த குதிரையை விவசாயி பார்க்க வரும் போது, குதிரை ஓடி ஆடி விளையாடியதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்.

இறையுணர்வு பெற்று இறைவனின் திருவடிகளை அடைய முயற்சியைக் கைவிடாது இருங்கள்" என்கிறது திருவாசகம்.

"நிற்பார் நிற்கநில்லா உலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிறப்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற்கு அரியன் பெருமானே" (திருவாசக.பா.611)

- நிலையற்ற இந்த உலகில் இருப்பவர் இருங்கள். நாம் இனி இருக்க மாட்டோம்.
- அழகால் தனக்குத் தானே ஒப்புமை உடைய திருமேனி கொண்ட, பாம்பு, அணிந்த பெருமானின் திருவடிகளைச் சென்று சேர்வோம்.
- அவனது பொன்னடியை அடைவதற்கு முயலுபவர் அனைவரும் அம்முயற்சியைக் கைவிடாது இருங்கள்.
- பிறகு பெருமை பேசி நிற்பதால் பயன் விளையாது.
- ஏனெனில் பெருமான் பெறுவதற்கு அருமை உடையவன்.

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 15. இன்று என்பதே நிஜம்

## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு முறை ஜென் துறவி தனது சீடர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்.

“இன்று என்பது மட்டுமே நிஜம், நாளை என்பது மாயை. அதனால் எந்த ஒரு காரியத்தையும் நாளை செய்து கொள்ளலாம் என்று தள்ளிப்போடாமல், இப்பொழுதே செய்துவிட வேண்டும்.

அதேசமயம் நாளை நடக்க இருப்பதை நினைத்து, இன்றைய பொழுதை இழந்து விடக் கூடாது” என்று அறிவுறுத்திக் கொண்டிருந்தார்.



அப்போது அந்த வழியாக வந்த ஒரு போர்வீரன், துறவியின் கூற்றை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

பின்பு ஒரு நாள் அந்த போர் வீரன் தனது எதிரிகளால் கைப்பற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

அன்றிரவு முழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. ஏனெனில், அடுத்த நாள் நடக்க இருக்கும் சித்தரவதைகளை பற்றி யோசித்து கொண்டிருந்ததால் அவனது தூக்கம் கலைந்தது.

சிறையில் இருந்த ஜன்னல் கம்பியை வளைத்து கூர் கம்பியாக மாற்றினான். அதை வைத்து தற்கொலை செய்து கொள்வது அவனது எண்ணமாக இருந்தது.

அப்போதுதான் ஜென் துறவியின் அறிவுரைகள் நினைவுக்கு வந்தன.

“நாளை என்பது மாயை, இன்று என்பது மட்டுமே நிஜம்” என்ற ஜென் துறவியின் கூற்றை மனதில் கொண்டு நிம்மதியாக உறங்கினான்.

மறுநாள் பொழுதும் விடிந்தது. அதிசயம் நிகழ்ந்ததை போன்று, போர்வீரனை அவனது நண்பர்கள் காப்பாற்றினர்.

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே” (சிவபுராணம் 90)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
ஜென்னும் திருவாசகமும்...
பாகம் 3
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# 16. ஒவ்வொரு நாளும் இன்பம்

(ஜென்னும் திருவாசகமும்)

ஜென் துறவியிடம் வந்த பணக்காரர் ஒருவர்.



"எனக்கு பொழுது போவதே சிரமமாக உள்ளது. அதை எப்படியாவது சரி செய்து தாருங்கள்" என்று கேட்டார்.

"இந்த நாள் மீண்டும் வராது, அது இரத்தின் கல்லைப் போல் மதிப்பு வாய்ந்தது. இந்த நாளின் ஒவ்வொரு நிமிடமும் விலை மதிப்பில்லாதது, எவ்போதும் இப்போதே வாழ்" என்று கூறி அனுப்பினார் துறவி.

## இன்பம் பெருக்கும் – திருவாசகம்

"இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடவுஅறுத்துச் சோதியாய் – அன்பு அமைத்துச்
சீரா பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து." (திருவா.பா.627)

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 17. கடவுளே போற்றி

(ஜென்னும் திருவாசகமும்

அந்த ஜென் குரு அவ்வப்போது தனது மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் மிகவும் சுருக்கமாக, எளிய முறையில் பதில் சொல்வது வழக்கம்.

அவ்வப்போது சீடர்கள் கேள்விகள் கேட்பதும் அவர் பதில் சொல்வதும் தொடரும்.

சீடர்களில், ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏதாவது சந்தேகம் தோன்றிக் கொண்டே இருக்கும். அதை அவர் தீர்ந்து வைப்பார்.

ஒரு சீடர், “குருவே புத்தர் ஏன் கடவுளைப் பற்றி எதுவும் பேசவில்லை” என்று கேட்டார்.

“கடவுளே போற்றி என்னைக்
    கண்டுகொண்டு அருளு போற்றி
விடஉளே உருக்கி என்னை
    ஆண்டிட வேண்டும் போற்றி
உடல்இது களைத்திட்டு ஒல்லை
    உம்பர்தந்து அருளு போற்றி”   (திருவா.பா.627)


திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 18. சாதலை முன்னம் அஞ்சேன்

(ஜென்னும் திருவாசகமும்)

ஒருமுறை பசுய் என்கிற ஜென் குரு தான் இறக்கும் நேரத்தில் தனது சீடர்களை அழைத்தார்.

“மாணவர்களே! நீங்கள் எப்போதும் எதற்கும் கவலை கொள்ளக்கூடாது.



அதிலும் இறப்பை கண்டு எந்த நேரமும் பயப்படக் கூடாது.

ஏனெனில் நமது மனம் எந்த ஒரு சாராம்சம் கொண்டு பிறந்தது அல்ல.

சொல்லப் போனால் மனதிற்கு எந்த ஒரு நிறம், வடிவம், இது தான் பிடிக்கும்,

சந்தோஷம் வந்தால் மகிழ்ந்தும், வருத்தத்தின் போது வலிகளும் கொள்வதில்லை.

அவை அனைத்தும் நீங்கள் உணர்வதிலேயே இருக்கிறது.

மேலும் உன் மனம் சரியில்லை என்றால் அதற்கு உடனே மனதை தளர விடாமல் இருக்க வேண்டும்.

அந்த நேரத்தில் மனம் சரியில்லையெனில், முதலில் உங்கள் மனதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் நீங்கள் எதை எதிர் கொள்கிறீர்கள், எதனால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை உண்மையில் உங்களால் அறிய முடியும்.

மேலும் இந்த உலகில் எதுவும் நிரந்தரமானது இல்லை, எதற்கும் பேராசை பட வேண்டாம்.

முக்கியமாக இறப்பைக் கண்டு பயப்படக் கூடாது. இந்த உலகில் பிறந்த அனைத்திற்கும் இறப்பு என்பதும் உண்டு" என்று கூறினார்

"தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்" (திருவாச.பா.522).

திருவாசக ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 19. உருகிப் பெருகி உளம்குளிர

(ஜென்னும் திருவாசகமும்)

துறவி ஒருவர் ஆற்றில் மூழ்கி தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு இளைஞன் குறுக்கிட்டு "ஐயா நான் தங்களின் சீடனாக சேர விரும்புகிறேன்" என்றான்.

ஆற்றிலிருந்து எழுந்தவர், "ஏன்?" என்றார் துறவி.
"நான் கடவுளை அறிய விரும்புகிறேன்" என்றான்.

சட்டென்று துறவி அவன் கழுத்தின் பின்புறத்தைப் பிடித்து இழுத்து, அவன் தலையை ஆற்றினுள் முக்கினார்.

சிறிது நேரத்தில் மூச்சிறைத்த இளைஞன், திமுறிக் கொண்டு வெளியே வரத் துடித்தான்.

கடைசியாக துறவி அவனைப் பிடித்து வெளியே இழுத்தார்.

வெளியில் வந்த இளைஞன் இருமிக் கொண்டு பெரு மூச்செறிந்தான்.

துறவி கேட்டார், நீ நீரினுள் மூழ்கி இருக்கும் போது உனக்கு என்ன தேவைப் பட்டது?" என்றார்.

"காற்று" என்றான் இளைஞன்.

"நல்லது, வீட்டுக்குச் செல். காற்று போல கடவுள் உனக்கு எப்போது தேவையோ அப்போது திரும்பி வா" என்று சொல்லி விட்டார்.

“உருகிப் பெருகி உளம்குளிர முகந்துகொண்டு
பருகற்கு இனிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்து அடியோம்
திருவை பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ” (திருவா.பா.249)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 20. அன்பினால் அடியேன்

## (ஜென்னும் திருவாசகமும்)

தன்னுடைய சீடனுடன் உலாவிக் கொண்டிருந்த ஜென் குரு அங்கிருந்த மலையின் அழகைக் கண்டு வியந்து போனார்.



"இந்த அதிகாலை வேலையில் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது இந்த மலை” என்று சீடரிடம் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

அதைக் கேட்ட சீடன், “நீங்கள் புகழ்ந்து கூறும் அளவிற்கு அந்த மலை நமக்கு என்ன கொடுத்திருக்கிறது?” என்று கேட்டான்.

“மலை அழகாக இருப்பதால் எனக்கு மனதில் அன்பு தோன்றியதே தவிர நேசிப்பதற்கு எந்தவிதமான காரணமும் தேவையில்லை” என்று கூறினார் குரு

“அன்பினால் அடியேன் ஆவியொடு ஆக்கை
    ஆனந்தமாய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
    யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறு

முன்பமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே...” (திருவா.பா.389)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

.

# 21. ஞானமிலா அழுக்குமனத் தடியேன்

## (ஜென்னும் திருவாசகமும்

ஜென் குரு ஒருவரை இளைஞன் ஒருவன் வணங்கினான். “நான் எளிதில் ஞானம் பெற விரும்புகிறேன். அதற்கு ஏதேனும் வழி இருந்தால் சொல்லுங்கள்” என்று பணிவுடன் கேட்டான்.

“தியானம் செய். புத்தர் பெருமானை வழிபட்டுப் பூஜை செய். பிறகு வாழைப் பழம் சாப்பிடு” என்றார் அவர்.

“நாள்தோறும் எத்தனை வாழைப் பழங்கள் சாப்பிட வேண்டும்?” என்று கேட்டான் அவன்.

“நாள்தோறும் எவ்வளவு நேரம் தியானம் செய்ய வேண்டும்? எவ்வளவு நேரம் புத்தர் பெருமானை வழிபட வேண்டும் என்று கேட்டிருந்தால் உனக்கு ஞானத்தில் நாட்டம் உள்ளது என்பது தெரிந்து இருக்கும்.

நீயோ எத்தனை வாழைப் பழங்கள் சாப்பிடுவது என்று கேட்டாய். ஞானம் பெற உனக்கு ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை. வயிற்று வலி வரத்தான் வாய்ப்பு உள்ளது. ஞானம் பெற உனக்குத் தகுதி இல்லை. போய் வா” என்றார் அவர்

“- - - - - - - - - - - - -- - - - - -யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே.”
(திருவா.பா.408)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22. வேண்டேன் புகழ்

(ஜென்னும் திருவாசகமும்

ஜப்பானிய செல்வந்தர் ஒருவர் சம்பந்தப்பட்ட விழாவுக்கு ஜென்ஞானி காசன் அழைக்கப்பட்டிருந்தார்.

இதற்கு முன் இப்படியொரு ஆடம்பர விழாவில் அவர் கலந்து கொண்டதில்லை.

எனவே, அவருக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டது.

வியர்த்து கொட்டியது.

இந் நிகழ்ச்சிக்குப் பின் காசன் தன் மாணவர்களை அழைத்தார்.

“என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவன். உலகத்தில் ஏற்படும் பிரபலத்தை சமமாகப் பாவிக்க முடியாத மனநிலையில் தற்போது இருக்கிறேன். நீங்கள் வேறு ஆசிரியரிடம் சென்று பயிலுங்கள்'' என்று கூறி விடைபெற்றார்.

பின்னர், ஒரு கோயிலில் சென்று தனிமையில் தியானம் செய்தார்.

வேறு ஓர் ஆசிரியரிடம் மாணவராகச் சேர்ந்து பயின்றார். எட்டு ஆண்டுகளுக்குப் பின் காசன் ஞானம் அடைந்தவராக புதிய மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

“வேண்டேன் புகழ், வேண்டேன் செல்வம் வேண்டேன் விண்ணும் மண்ணும்,

வேண்டேன் பிறப்பு, இறப்பு, சிவம் வேண்டார் தமை நாளும்
தீண்டேன், சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை, இறை தாள்
பூண்டேன், புறம் போகேன், இனிப் புறம் போகல் ஒட்டேனே."
(திருவா.பா.512)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 23. அச்சமில்லை அச்சமில்லை

## (ஜென்னும் திருவாசகமும்)

ஒரு பெரிய குருகுலத்தில் அனைத்திலும் மிகவும் திறமை வாய்ந்த ஒரு ஜென் குருவிடம் சகாதேவன், மகாதேவன் என்னும் இரு மாணவர்கள் நீண்ட நாட்களாக கல்வி பயின்று வந்தனர்.

அந்த குருவிற்கு தெரியாதது எதுவுமே இல்லை என்று சொல்லலாம்.

அத்தகைய அவரிடம் பயிலும் அந்த இரு மாணவர்களும் மிகவும் நெருங்கிய நண்பர்கள்.



அதில் மகாதேவன் நேர்மையானவன், எதையுமே மனதில் வைத்து பேசத் தெரியாதவன். எப்போதுமே வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவன்.

அவனுக்கு தான் கற்ற கல்வியை மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு.

மேலும் தன்னைப் போலவே அனைவரும் நேர்மையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவன்.

ஆனால் சகாதேவன் சற்று வித்தியாசமானவன். எதையும் வெளிப்படையாக பேச மாட்டான்.

மிகவும் பொறுமை சாலி, எந்த பிரச்சனைக்கும் செல்லாதவன். யார் என்ன சொல்லி, திட்டினாலும், ஏமாற்றினாலும், அதை தன் மனதிலே வைத்து, கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவன்.

ஒரு முறை விளையாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு மாணவன் அவனிடம் வம்பு இழுத்து, அடித்து திட்டிவிட்டான்.

அப்போது சகாதேவனுடன் அவனது நண்பன் மகாதேவன் இல்லை. இதனால் சகாதேவனுக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது.

உடல் நிலை சரியில்லை என்பதை அறிந்த அவனுடைய நண்பன் மகாதேவன், அவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்லாமல், அவனது குருவிடம் அழைத்துச் சென்றான்.

நீண்ட நாட்கள் அவர்களுடன் இருந்த அந்த குருவிற்கு சகாதேவனுக்கு எதனால் உடல் நிலை சரியில்லை என்று புரிந்துவிட்டது.

அதனால் அவர் சகாதேவனிடம் “இது உடலில் வந்த நோய் அல்ல. உன் மனதில் வந்த நோய். அதை நீ தான் சரி செய்ய வேண்டும்” என்று கூறினார்.

அந்த குரு, அவ்வாறு சொல்வதற்கு காரணம், அந்த சகாதேவனின் மனதில் பயத்தின் காரணமாக தைரியம் குறைவாகவும், அளவுக்கு அதிகமான பொறுமை, சகிப்புத் தன்மை அளவுக்கு அதிகமாக இருப்பது போன்றவை இருக்கின்றன.

இவையும் ஒரு வகையான நோய் தான். ஆகவே அந்த நோயை அவன் சரிசெய்து விட்டால், அவன் சரியாகிவிடுவான், என்பதற்காகவே சொன்னார்.

- பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
- கற்றில்லாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
- வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
- அருவராதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
- வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
- அன்பிலாதவரைக் கண்டால்  அம்ம நாம் அஞ்சுமாறே
- அவர்கிறி முறுவல் அஞ்சேன்
- அளிஇலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே
- பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
- அணிகிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே
- வரைபுரண்டிடினும் அஞ்சேன்
- ஆளலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
- சாதலை முன்னம் அஞ்சேன்
- அகம்நெகா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
- தழல்விழி உழுவை அஞ்சேன்
- அறிவிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
- மன்னரோடு உறவும் அஞ்சேன்
- அஞ்சுவார் அவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
- கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
- ஆணலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே
  (திருவா.பா.516 - 525)

திருவாசகம் ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## ஜென்னும் திருவாசகமும் பாகம் 1

## Youtube Links

1. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் https://youtu.be/nMJO-kNchmQ
2. மனம் உழலாத நிலை வேண்டும்! https://youtu.be/bepPF5va0L8
3. தயிர் போல மனம் உடைந்தேன் https://youtu.be/9rPWwejuYyc
4. பாவிடை ஆடுகுழல் போல் கரந்து பரந்தது உள்ளம் https://youtu.be/VL8YaHu60xQ
5. தளிர்ப்பொற் பாதம் தாராயே **https://youtu.be/dWAFeNS8buQ**
6. தேவையானது எது? https://youtu.be/UXAL9D4qQqQ
7. ஞானம் தேடி அலையும் பக்தர்கள். https://youtu.be/aUQ9kheBOtk
8. உளமார்ந்த மன்னிப்பு https://youtu.be/0CVR_0lpbys
9. வினைக்கு விளைவு உண்டு? https://youtu.be/8JWb-Z9WpWQ
10. இறப்பு ஏன் ஏற்படுகிறது? **https://youtu.be/P9EeP65rPU4**
11. கவலையை ஒழிக்கும் இறைவன் https://youtu.be/OdUCGIpoaUc
12. கடவுள் எங்கே? https://youtu.be/AIgAb7Ih2SE
13. அன்பு இல்லாதவரைக் கண்டு பயப்படுவேன் https://youtu.be/j5Mh8PvO7gQ
14. அம்முயற்சியைக் கைவிடாது இருங்கள் https://youtu.be/AwWQvUy2jVo
15. இன்று என்பதே நிஜம் https://youtu.be/WaUwcQsD1b8
16. ஒவ்வொரு நாளும் இன்பம் https://youtu.be/O8OnKt7XWDs
17. கடவுளே போற்றி https://youtu.be/oABe3VH_Cl0
18. சாதலை முன்னம் அஞ்சேன் https://youtu.be/XTM4lwm2esU
19. உருகிப் பெருகி உளம்குளிர https://youtu.be/oMniWqRe-cY
20. அன்பினால் அடியேன் https://youtu.be/UUYXw8JQzAY
21. ஞானமிலா அழுக்குமனத் தடியேன் https://youtu.be/hgB_w3fiHpg
22. வேண்டேன் புகழ் https://youtu.be/7Wx4S3or0-E
23. அச்சமில்லை அச்சமில்லை https://youtu.be/QbkCzJJaCRU

## துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. மாணிக்கவாசகர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
5. இணையதள தகவல்கள்.
6. Zen Stick – karn Rahul - Kindly Store
7. Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya
8. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
9. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
10. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
11. 100 ஜென் கதைகள், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை
12. ஜென் கதைகள், எ.ஜோதி, நன்மொழிப் பதிப்பகம், சென்னை.


# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி

11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் மானுட வேதம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்

16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி

17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து

15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்

8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## **தன்னம்பிக்கை தன்னம்பிக்கை**

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## **சிறுகதைகள்**

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்கனை அடியிற்கண்ட 125 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்

8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞுமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1

43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1

78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து

113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120..வேதாத்திரியம் மானுட வேதம்

121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி

122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்

123.வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்

124. மனவளக்கலையின் மகத்துவம்

125 அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்

